பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 25 | செவ்வாய்க்கிழமை | 10.12.2024 | அதிர்வு 130

## முன்னாள் எம்.பி. சிவாஜி அதிதீவிர சிகிச்சையில்!



தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் திடீர் சுகவீனமுற்ற நிலையில் சுயநினைவற்று 05

## வழிகாட்டி சரியாக இல்லையேல் நீதி கிடைக்காது!

### சர்வதேச ஊழல் எதிர்ப்புத் தின தேசிய நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

எத்தனை சட்டங்கள் இயற்றினாலும், எத்தனை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டாலும், அவற்றை வழிநடத்துபவர்கள் சரியாகச் செயற்படாவிட்டால், குடிமக்களுக்கு நீதி நிலைநாட்டப்படாது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மக்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு நீதி வழங்கப்படாவிட்டால், அந்த அதிகாரம் பயனற்றதாகிவிடும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற 2024 சர்வதேச ஊழல் எதிர்ப்புத் தின தேசிய நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார். 05



### சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி

# வடக்கு, கிழக்கில் இன்று மாபெரும் போராட்டங்கள்

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுப்பு



(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் பெரும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடியும், அவர்களுக்கு நீதி கோரியும் கடந்த பல வருடங்களாக அவர்களின் உறவுகள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். 06

## யாழில் உயிரைப் பறிக்கும் திடீர் காய்ச்சல்! மூன்று நாள்களில் நால்வர் பரிதாபச் சாவு!!

யாழ்ப்பாணத்தில் திடீர் காய்ச்சல் காரணமாக கடந்த மூன்று நாள்களில் நால்வர் உயிரிழந்துள்ள நிலையில், பொதுமக்கள் இது தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்று சுகாதாரத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

காய்ச்சல், இருமல் மற்றும் மூச்சுத் திணறல் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாட வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

காய்ச்சல் காரணமாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட இவர்கள், நோய் திடீரெனத் தீவிரத்தன்மை அடைந்து உயிரிழந்துள்ளனர். இவர்களின் சுவாசத் 06






மாகாண சபைத் தேர்தல்கள் கால வரையறையின்றி தள்ளிப் போவதுதான் தமிழர் அரசியலில் இப்போது சர்ச்சைக்குரிய விடயமாகப் பேசப்படுகின்றது.

இந்தத் தேர்தலை நடத்துவதில் உள்ள முதல் சிக்கல் தேர்தலை நடத்துவதற்கான சட்டம் நடைமுறையில் இல்லை என்பதுதான். இதுவரை இருந்த சட்டம் 2017 இல் நல்லாட்சி அரசின் கீழ் ரத்துச் செய்யப்பட்டமைதான் இப்போதைய பிரச்சினைக்குக் காரணம். சீரமைக்கப்பட்ட புதிய சட்டம் ஓராண்டுக்குள் கொண்டுவரப்படும் என்ற உறுதிப்பாட்டுடன் இருந்த சட்டம் ரத்து செய்யப்பட்டது. ஆயினும் ஏழு ஆண்டுகள் கழிந்தும் புதிய சட்டம் உருப்பெறுவது சாத்தியமாகவில்லை.

சீரமைக்கப்பட்ட புதிய சட்டத்திற்காகப் பார்த்திருக்காமல், அது வரும் வரையிலும் பழைய தேர்தல் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்து, அதன் கீழ் இந்தத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் தமிழர் தரப்பின் வற்புறுத்தலாக இருக்கின்றது. 05



# வவுனியாவில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரைக் கைது செய்த போது குழப்ப நிலை!

## மேலும் இருவர் பொலிஸாரால் கைது

(கி.வசந்தன்)

வவுனியாவில் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்த நிலையில் அந்தப் பகுதியில் குழப்ப நிலை ஏற்பட்டதையடுத்து மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியா நீதிமன்றத்துக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் நேற்று மதியம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவர் அந்த வீதியில் நிற்பதை அவதானித்த வவுனியா பொலிஸார் அவரை மடக்கிப் பிடித்தனர். இதன்போது அவர் பொலிஸாருடன் செல்ல மறுத்ததால் அந்தப் பகுதியில் குழப்ப நிலை ஏற்பட்டது.

இருந்தபோதும், கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டபோது அந்தப் பகுதியில் தொலைபேசியில் ஒளிப்படம் எடுத்ததுடன், அப்பகுதியில் தமது கடமைக்குக் குழப்பம் விளைவித்தார்கள் எனத் தெரிவித்து மேலும் இருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.



கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.



# பருத்தித்துறையில் குடும்பஸ்தர் காய்ச்சல் காரணமாக உயிரிழப்பு

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலோலி தெற்கு பகுதியில் காய்ச்சல் காரணமாக இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதே இடத்தை சேர்ந்த கந்தசாமி சசிகுமார் (வயது 40) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபருக்குக் கடந்த மூன்றாம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது. அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# அரசின் கொள்கைகளை விளக்க இந்திய விஜயத்தில் அநுர திட்டம்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 16 ஆம் திகதி இந்தியா செல்லவுள்ள நிலையில், அந்நாட்டுப் பிரதமருடனான இரு தரப்பு சந்திப்பின்போது புதிய அரசின் கொள்கைகள் பற்றி தெளிவுபடுத்தவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இந்தியப் பயணத்தின் பின்னர் எதிர்வரும் ஜனவரி மாத முற்பகுதியில் சீனாவுக்கும் பயணம் மேற்கொள்ள ஜனாதிபதி அநுர திட்டமிட்டுள்ளார்.

முதலீடுகளை ஈர்ப்பது, இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிப்பது, கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தப் பயணத்தின்போது அவதானம் செலுத்தப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

அதேநேரம், டில்லி மற்றும் கொழும்புக்கிடையில் கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பில் இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

முக்கியமாக மின்சக்தி துறையில் இந்திய முதலீடுகள் பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

# காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் உயிரிழப்பு

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வரணிப் பகுதியில் காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

வரணி வடக்கு, வரணியைச் சேர்ந்த கோகிலான் தவராசா (வயது 60) என்ற மூன்று பிள்ளைகளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதாகவும் மூச்சு விட முடியாத நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை (08) பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், நேற்று திங்கள் கிழமை (09) நண்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.



# வருமானம், செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ள 7,412 வேட்பாளர்கள்




கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 8,361 வேட்பாளர்களில் 7,412 பேர் வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கடந்த 6 ஆம் திகதி நள்ளிரவுடன் அதற்காக வழங்கப்பட்டிருந்த கால எல்லை நிறைவடைந்தது.

இதன்படி, 690 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் 493 மட்டுமே அந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளன.

இந்தநிலையில், தேசியப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்த 527 வேட்பாளர்களில் 434 பேர் வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# முதலாவது இறக்குமதி அரிசி தொகுதி 16 ஆம் திகதி நாட்டை வந்தடையும்

அரசாங்கம் இறக்குமதி செய்த அரிசியின் முதலாம் தொகுதி எதிர்வரும் 16 ஆம் திகதியளவில் நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரச வர்த்தக கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக 52,000 மெற்றிக் டன் அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இந்த அரிசி தொகை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளது.

நாட்டுக்குக் கொண்டு வரப்படும் அரிசியை விரைவாக நுகர்வோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாகன இறக்குமதி தொடர்பில் பல நிறுவனங்கள் மோசடி



வாகன இறக்குமதி தொடர்பில் அரசாங்கம் உறுதியான தீர்மானத்தை மேற்கொள்ளாத நிலையில், வாகன இறக்குமதிக்கு அனுமதியளிப்பதாகக் கூறி பல நிறுவனங்கள் நிதி மோசடியில் ஈடுபட்டுவருகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து இலங்கை மத்திய வங்கி கவனம் செலுத்த வேண்டும் என பேராசிரியர் அமிந்த மெட்சில பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவதாக தற்போதைய அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும், இதுதொடர்பில் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை.

எதிர்காலத்தில் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என்ற கருத்தை மக்கள் மத்தியில் உருவாக்கி புதிய வாகனங்களுக்காக சில நிறுவனங்கள் லட்சக்கணக்கான ரூபாவை முன்பணமாகப் பெற்றுக்கொண்டு மோசடியில் ஈடுபடுகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்காக நல்லாட்சி அரசின் இறுதி காலத்திலும், பின்னர் கடந்த நாடாளுமன்றத்திலும், பழைய மாகாண சபை தேர்தல் சட்டத்திற்கு மீண்டும் உயிர் கொடுக்கச் செய்யும் சட்டம் மூலம் ஒன்றை தனிநபர் பிரேரணையாக யாழ் மாவட்ட எம்.பியாக இருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கொண்டு வந்திருந்தார்.

கடந்த நாடாளுமன்றத்தில் அது முன்நகர்ந்து, இறுதிக்கட்ட – மூன்றாம் கட்ட – வாசிப்புக்கு நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட இருந்த நிலையில், அப்போது நடக்கவிருந்த ஜனாதிபதி தேர்தலில் தம்மைத் தமிழரசு கட்சி ஆதரிக்கவில்லை என்ற காழ்ப்புணர்வில் அந்தச் சட்ட மூலம் நிறைவேறுவதற்கான கடைசி நிமிடத்தில் அதற்கு ஆப்படித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மூன்றாவது வாசிப்புக்குரிய அந்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிக்கும் ஓர் இரண்டு நிமிட நடவடிக்கைக்கு இடமளித்து இருந்தால் அது சட்ட மூலமாகியிருக்கும். இன்று மாகாண சபைத் தேர்தலைத் தன்னிஷ்டப்படி தள்ளிப் போட முடியாமல் விரைந்து நடத்த வேண்டிய கட்டாயத்துக்கு புதிய அரசுத் தலைமை தள்ளப்பட்டிருக்கும்.

2017–இல் மாகாண சபை தேர்தல் முறைமையைத் தொடர முடியாத ஆப்பை ரணிலின் அரசே அடித்தது. அந்தத் தேர்தலை நடத்தச் செய்வதற்காக அடுத்த வாய்ப்பு கிட்டிய போதும் அதே ரணில் விக்கிரமசிங்கவே அதையும் நாசமாக்கினார்.

அதன் விளைவாக தான் போட்டியிட்ட மூன்றாவது ஜனாதிபதி தேர்தலில் மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டு மூன்றாவது தடவையும் பெரும் தோல்வி அடையும் அவல நிலைக்கு உள்ளானார்.

முன்னைய இரண்டு நாடாளுமன்றங்களிலும் இந்த மாகாண சபைத் தேர்தலை நடத்தச் செய்யும் எண்ணத்துடன் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கொண்டு வந்த மாகாண சபைகள் திருத்தச் சட்ட மூலம் என்ற தனிநபர் சட்டப் பிரேரணையை இந்த தடவையும் கொண்டு வந்து, புதிய அரசை இவ்விடயத்தில் நெருக்கடிக்குள் நெட்டித்தள்ளி, தேர்தலை நடத்த செய்ய வைக்கும் முயற்சியில் ஈடுபடுவது குறித்து தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான சாணக்கியன் ஆலோசித்து வருகின்றார் என்று தெரிகின்றது. சுமந்திரன் முதலிரண்டு நாடாளுமன்றங்களிலும் முன்னெடுத்த தனிநபர் சட்டப் பிரேரணையை சாணக்கியன் இம்முறை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கக் கூடும்.

அதற்கு அவருக்கு சுமந்திரனின் முழு ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனைகள் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

\+ + +

தேர்தல் என்றால் அரசியல்வாதிகளுக்குத் திண்டாட்டம், அதிகாரிகளிற்கு கொண்டாட்டம் என ஒரு பேச்சுவழக்கு நம்மத்தியில் உண்டு. அது இம்முறையும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது போலும்.

தேர்தல் என்றாலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஒரே கொண்டாட்டம் தான். வருமானம் பிய்க்கும் என்ற சந்தோஷம்தான். எனினும், இந்த வருமான ஆசை எல்லை மீறி பேராசையானால், அது சில சமயங்களில் வினையை விலைக்கு வேண்டித் தருவதாக அமைந்து விடும்.

இந்த ஆண்டின் செப்ரெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டிய நிதிக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் வடக்கு மாகாணத்தின் இரு உதவித் தேர்தல் ஆணையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இரு தேர்தல்களிலும் மின்சாரம், உணவு விநியோகம் போன்ற நிதிச் செலவுகளில் சில மில்லியன் ரூபா நிதி முறைகேடான கணக்கிடல் இடம்பெற்றதான முறைப்பாடு கண்டுகொள்ளப்பட்டு, ஓர் அதிகாரி விசாரணைக்காக கொழும்பிற்கு அழைக்கப்பட்டார். பல சம்பவங்கள் – கணக்குகள் – தொடர்பில் துருவித் துருவி விசாரணைகள் இடம்பெறுகின்றன.

தேர்தல்களின்போது ஒவ்வொரு விசேட அதிகாரி தேர்தல்கள் ஆணைக்குழுவில் இருந்து மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழமை. இதற்கமைய தேர்தல்கள் ஆணைக்குழுவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட விசேட அதிகாரி வடக்கு மாவட்டம் ஒன்றில் சில விடயங்களைக் கண்டுபிடித்து பரிந்துரைத்தமையின் பெயரில் முதல் கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிகின்றது.

விசாரணையின்போது ஓர் உதவித் தேர்தல் ஆணையாளர் மாவட்டத்தில் இருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டு, கொழும்பிற்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் துருவப்படுகின்றன. ஆனால், விசாரணை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அந்த உதவித் தேர்தல் ஆணையாளர் ஒரு வார கால விடுமுறையை சமர்ப்பித்து விட்டு வீட்டுக்குச் சென்று விட்டார்.

வீடு சென்ற அதிகாரி பணி இடைநிறுத்தப்படும் சூழல் காணப்படுவதாகத் தற்போது சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதேவேளை, வடக்கின் மற்றுமோர் அதிகாரியின் கணக்கிடல் முறைமை தொடர்பிலும் அதிருப்தி கண்ட ஆணைக்குழு, சில விடயங்களை உறுதி செய்த போதும், அவர் மீது கருணை – பரிவு – காட்டியிருப்பதாகத் தெரிகின்றது. அடுத்த தேர்தல் அறிவிப்பிற்கு முன்னர் தேர்தல் செயலகத்தில் இருந்து பிற திணைக்களத்திற்கு சுய விருப்பின் பெயரில் வெளியேறுமாறு அவர் பணிக்கப்பட்டுள்ளார். இதனால் அந்த உதவித் தேர்தல் ஆணையாளரும் அப் பதவியில் இருந்து வெளியேறும் நிலைமை காணப்படுகின்றது.

தேர்தல் முடிந்தும் தேர்தல் திருவிழா திருவிளையாடல்கள் தொடரவே செய்கின்றன...!

---

## வழிகாட்டி சரியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த ஆண்டுக்கான சர்வதேச ஊழல் எதிர்ப்புத் தினம் "தூய்மையான எதிர்காலத்திற்காக இளைஞர்களை ஒன்றிணைப்போம்" என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்படுகின்றது.

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு போதுமான சட்டங்களும் நிறுவனங்களும் இருந்த போதும் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை தமது மனச்சாட்சியிடம் கேட்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஊழல் மற்றும் இலஞ்சம் என்பன சமூக அவலமாக மாறியுள்ளது. 2013 சர்வதேச சுட்டெண்ணில் 79 ஆவது இடத்தில் இருந்த இலங்கை 2023 ஆம் ஆண்டளவில் 115 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. எனவே, சர்வதேச ஊழல் எதிர்ப்புத் தினம் ஏன் கொண்டாடப்படுகின்றது என்றும் ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

வருடா வருடம் ஊழல் மோசடிகள் அதிகரித்து வருவதாகவும், அடுத்த வருடம் அதனைக் குறைக்க முடியாவிட்டால் சர்வதேச தினக் கொண்டாட்டங்களை நடத்துவதில் எவ்வித பயனும் இல்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

2021ஆம் ஆண்டில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு 69 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளதுடன் 40 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. 2022 இல் 89 வழக்குகளை தாக்கல் செய்த இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு 45 வழக்குகளை வாபஸ் பெற்றுள்ளது. இந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டமைக்கான காரணத்தை ஆணைக்குழு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும், விசாரணை அதிகாரிகள் வழக்குகளில் சாட்சிகளாகாதது ஏன் என்பதற்கான காரணங்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒரு வருடத்தில் இரண்டு கான்ஸ்டபிள்கள், ஒரு கிராம உத்தியோகஸ்தர் மற்றும் ஒரு எழுதுவினைஞர் ஆகியோர் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவால் தண்டிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் சட்டம் சிலந்தி வலையைப் போன்று செயற்படுவதாக மக்கள் கருதுகின்றனர். மேலும், அந்த வலையில் சிறிய விலங்குகள் சிக்குகின்றன. பெரிய விலங்குகள் சிலந்தி வலையை சேதமாக்கி தப்பிச் செல்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரச கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, அவ்வாறு செய்யாமல் ஆரோக்கியமானநாடொன்றைஉருவாக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

சட்டத்தை அமுல்படுத்தும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நீதியை நிலைநாட்டுவதைத் தாமதப்படுத்துவதும் நீதியை நிலைநாட்டுவதாக அமையாது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எனவே, இலஞ்ச, ஊழல் மட்டுப்படுத்தப்பட்ட நாடாக இலங்கையை மாற்றுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும், இதன் மூலம் பிரஜைகளின் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்பை வழங்க முடியும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

---

## முன்னாள் எம்.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு – கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தனிப்பட்ட விஜயமாக கொழும்புக்குச் சென்றிருந்தார். இந்நிலையில், வழக்கமான உடல் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது வைத்தியசாலையை அண்மித்த நிலையில் திடீரென அவரின் உடல் நிலை பாதிப்புக்கு உள்ளாகி சுயநினைவற்று மயங்கி வீழ்ந்தார்.

இதையடுத்து அவர் உடனடியாகக் கொள்ளுப்பிட்டி தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

கடந்த இரண்டு நாட்களாகச் சுயநினைவற்ற நிலையிலேயே உள்ள சிவாஜிலிங்கத்துக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கைச் சுவாச கருவியின் உதவியுடன் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

# பாதசாரி கடவையில் சென்ற நபரை மோதிய ஆட்டோ




பாதசாரி கடவையினூடாக கடந்து சென்ற நபரை வீதியால் சென்ற ஆட்டோ ஒன்று மோதி விபத்துக்குள்ளான சம்பவம் பருத்தித்துறையில் நேற்று திங்கள் கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் பருத்தித்துறையை சேர்ந்த நற்குணம் முரளிதரன் (வயது44) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மெத்தை கடைச் சந்தி பகுதிக்கு அருகில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் சமையல் எரிவாயு உருளையினை வாங்கி தோளில் சுமந்தவாறு பாதசாரி கடவையூடாக வீதியை கடக்க முயன்ற போது பருத்தித்துறை நகர் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று அவரை மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது பாதசாரி கடவையினூடாக பயணித்தவர் நிலைதடுமாறி விழுந்ததில் தலையின் பின் பகுதியில் அடிபட்டு காயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் தோளில் சுமந்து சென்ற எரிவாயு சிலிண்டர் மோதுண்டதில் விபத்தை ஏற்படுத்திய ஆட்டோவின் முன்பக்க கண்ணாடி நொருங்கி சேதமடைந்திருந்தது.

---

## வடக்கு, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை அரசிடம் நீதி கோரியும் கிடைக்காத நிலையில் சர்வதேசத்திடம் நீதி கோரி போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

இதுவரை தீர்வு கிடைக்காத நிலையில் சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று வடக்கு, கிழக்கில் பேரணி மற்றும் கவனவீர்ப்புப் போராட்டங்களை அவர்கள் முன்னெடுக்கவுள்ளனர்

அந்தவகையில், திருகோணமலையில் பஸ் தரிப்பிடத்திலும், அம்பாறையில் தம்பிலுவில் மத்திய சந்தையிலிருந்து திருக்கோவில் வரையும், மட்டக்களப்பில் தந்தை செல்வா சிலைப் பகுதியிலிருந்து காந்தி பூங்கா வரையிலும், வவுனியாவில் பஸ் நிலையத்திலும், முல்லைத்தீவில் கச்சேரிக்கு முன்பாகவும், யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீனம் முன்பாகவும், கிளிநொச்சியில் கந்தசுவாமி கோவில் முன்றல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அலுவலக முன்றலிலும், மன்னாரில் பஸ் நிலையத்திலும் இன்று காலை 10 மணிக்குப் போராட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அறிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டங்களில் மதத் தலைவர்கள், பொதுமக்கள், மக்கள் பிரிதிநிதிகள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஆதரவு தருமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி இன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் ஏற்பாட்டில் நீதி கோரல் சம்பந்தமான நிகழ்வொன்று நடைபெறவுள்ளது. நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## யாழில் உயிரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொகுதி கடும் பாதிப்படைந்துள்ளமை மருத்துவ அறிக்கைகளில் தெரியவந்துள்ள நிலையில் இவர்களின் உயிரிழப்புக்கு எலிக்காய்ச்சல் அல்லது உண்ணிக்காய்ச்சல் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது.

பருத்தித்துறையைச் சேர்ந்த 40 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் சாதாரண காய்ச்சல், இருமல் அறிகுறிகளுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அதேபோன்று வரணியைச் சேர்ந்த 60 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் காய்ச்சல், மூச்சுத் திணறல் அறிகுறிகளுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அதேவேளை காய்ச்சல், இருமல் அறிகுறிகளுடன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார். நாவற்குழியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவர் காய்ச்சல், இருமல் அறிகுறிகளுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சாதாரண காய்ச்சல் நிலைமையில் இருந்த இவர்களுக்கு திடீர் என நோய் தீவிரத்தன்மை அதிகரித்தை அடுத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். அங்கு நோய்த் தன்மை சடுதியாக தீவிரமடைந்ததை அடுத்து சிகிச்சை பெற்று வந்த நால்வரும் உயிரிழந்தனர்.

இவர்களின் உயிரிழப்புக்கு எலிக்காய்ச்சல் அல்லது உண்ணிக்காய்ச்சல் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அல்லது ஏதேனும் வைரஸ் தொற்றுக் காய்ச்சலாக இருக்கலாம் என்றும் கருதப்படும் நிலையில், உயிரிழந்தவர்களின் உடல்கூற்று மாதிரிகள் சட்டமருத்துவ அதிகாரியால் மேலதிக சோதனைகளுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளன.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தபோது, மூன்று நாள்களுக்குள் ஏற்பட்டுள்ள இந்த உயிரிழப்புகளை சாதாரண விடயமாகக் கடந்துவிட முடியாது என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடுமையான சுவாசத் தொகுதி பாதிப்புக் காரணமாகவே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடந்த சில நாள்களாக வடக்கில் கடும் மழை பெய்திருக்கும் நிலையில் எலிக்காய்ச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன. ஆனால், இந்த உயிரிழப்புக்களுக்குக் எலிக்காய்ச்சல் காரணம் என்று இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. உண்ணிக்காய்ச்சல் அல்லது ஏதேனும் வைரஸ் காய்ச்சல்கூடக் காரணமாக இருக்கலாம். கொழும்பில் இருந்து ஆய்வறிக்கை வந்த பின்னரே காரணத்தைச் சரியாகக் கூறமுடியும்.

ஆயினும், பொதுமக்கள் இது தொடர்பாக விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியம். பொதுமக்கள் சுகாதாரத்தைச் சரியாகப் பேணிச் செயற்பட வேண்டியது அவசியம். ஆராக்கியமான உணவுப் பழக்கவழக்கம் மற்றும் சுத்தமான குடிதண்ணீர் பாவனை அவசியமானது.

அத்துடன் காய்ச்சல், இருமல் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாகத் தகுதி வாய்ந்த வைத்தியரை நாடி உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்." - என்றார்.

# யாழில் விபத்தில் சிக்கிய வயோதிபர் ஒருவர் மரணம்




விபத்தில் சிக்கி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த தம்பையா சுப்பிரமணியம் (வயது 81) என்பவரே உயிரிழந்தவராவார்.

காங்கேசன்துறை வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் மோதி இவர் விபத்துக்குள்ளானார். படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி வின்சன் தயான் அஞ்சலா மேற்கொண்டார்.

# தீயில் எரிந்த நிலையில் பெண் சடலமாக மீட்பு



பெண் ஒருவர் தீயில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நெல்லியடி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கரணவாய் பகுதியில் நேற்று திங்கள் கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சங்கரன் தோட்டம் கரணவாய் தெற்கைச் சேர்ந்த சிவகுரு சிவபூங்கா (வயது 48) என்ற திருமணமாகாத பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இவர் இரண்டு சகோதரிகளுடன் வீட்டில் வசித்து வந்துள்ள நிலையில், வீட்டுக்கு அருகாமையில் உள்ள பனங்காணி ஒன்றில் தீயில் எரிந்த நிலையில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் அதிகரித்த மதுபானசாலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வியாழன் ஆர்ப்பாட்டப் பேரணி




கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்த மதுபானசாலைகளுக்கு எதிரான கண்டனப் போராட்டமும் பேரணியும் நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் ஆர்ப்பாட்டப் பேரணி மாவட்ட செயலகம் வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனவரிக்குப் பிறகு 362 மதுபான சாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்களும், 174 சில்லறை மதுபான விற்பனை நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களும் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழிருந்த நிதி அமைச்சின் மூலமாக வழங்கப்பட்டன என்று அண்மையில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாவட்ட வாரியாக கிளிநொச்சிக்கே அதிகமான மதுபானசாலைக்கான (16) அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மனித உரிமைகள் தினம்

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினமாகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் கண்ணியமாக வாழ்வதற்கான உரித்து - உரிமை - மனித சமூகத்தில் மறுக்கப்பட முடியாத ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் அத்தகைய வாழ்வியலை பேணி உறுதிப்படுத்துவது மனித குலத்தின் மாண்பாக - இன்றியமையாத கடப்பாடாக - மதிக்கப்படுகின்றது.

கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், தனது மத நம்பிக்கையைத் தொடரும் சுதந்திரம், எழுத்துரிமை, கல்வி, மருத்துவம், சுகாதாரம், குடிதண்ணீர் போன்ற அடிப்படை தேவைகளைப் பெற்று சுதந்திரமாக உயிர் வாழ்வதற்கான உரிமை போன்றவை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. இனம், நிறம், மொழி, பாலினம், அரசியல், ஜாதி, மதம், பிறப்பு, சொத்து, பிற அந்தஸ்து, தேசிய அல்லது சமூக தோற்றம் என எதிலும் பாகுபாடு பார்க்கக்கூடாது என்பதை உணர்த்துவதே இந்தத் தினத்தைக் கொண்டாடுவதற்கான முக்கிய நோக்கமாகும். ஒவ்வொரு தனி மனிதனும், தான் வாழ்வதற்கான உரிமையை பெறுவதும், மற்ற மனிதரையும் வாழ விடும் நெறிமுறையை உணர்த்துவதற்காகவும் மனித உரிமைகள் தினம் ஆண்டு தோறும் டிசம்பர் 10 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்ட பின்னர் மனித உரிமை பிரகடனத்தை உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

அதன்படி இந்தக் குழு 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகளை அடையாளம் கண்டு சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை ஐ.நா. சபையில் சமர்ப்பித்தது. இந்தப் பிரகடனத்துக்கு 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி ஐ.நா. சபையில் 58 நாடுகள் அங்கீகாரம் வழங்கின. இந்த நாள்தான் 1950 ஆம் ஆண்டு முதல் சர்வதேச மனித உரிமைகள் தினமாக அறிவிக்கப்பட்டு ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

எல்லா மனிதர்களும் சுதந்திரமானவர்களாகவும், உரிமையிலும், கண்ணியத்திலும் ஒருவருக்கொருவர் சமமானவர்களாகவும் மதிக்கப்பட வேண்டுமென்பதை இப்பிரகடனம் வலியுறுத்துகிறது. உலகளவில் பாதுகாக்கப்பட வேண்டிய அனைவரின் அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகிறது.

'எங்கள் உரிமை, எங்கள் எதிர்காலம் - இப்போதிருந்தே...!' (Our Rights, Our Future, Right Now) எனும் தொனிப்பொருளில் இந்த ஆண்டிற்கான மனித உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்னலுக்கு ஆள்படுத்தப்படுவது, மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவது, அடிப்படை உரிமைகளை மறுக்கப்படுவது என வறியவர்கள், நலிவுற்றோர் மற்றும் அடக்கப்படும் இனக் குழுமத்தவர்கள் என்று உலகின் கணிசமான எண்ணிக்கையானோர் இன்றளவும் துன்பங்களைச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அந்தத் துன்பியல் நிலைமை முடிவுறாத் தொடர்கதையாக நீடிக்கவே செய்கின்றது.

இலங்கையிலும் அடக்கப்படும் தேசிய இனங்களான சிறுபான்மையினர் - குறிப்பாக தமிழ்ப் பேசும் மக்கள் - இந்த வகையில் கடந்த 75 ஆண்டுகளாக அடிப்படை மனித உரிமைகள் மறுகப்பட்ட மக்கள் குழுமமாகத் தொடர்ந்து அவலப்பட்டு வருகின்றனர். அவர்களுக்காக சர்வதேச சமூகம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் வரைக் குரல் கொடுத்துத் தீர்மானங்களை நிறைவேற்றியும் கூட அவர்களுக்கு மறுக்கப்பட்ட நீதி இன்னும் கிட்டுவதாகவில்லை. பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் கொடுங்கோன்மையாக அடக்குமுறை அடாவடி இலங்கையில் நீடிக்கின்றது.

இங்கு படையினரால் வலிந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரம் தமிழர்கள் தொடர்பில் நீதி வேண்டி அவர்களின் உறவினர்கள் நடத்தும் தளராத - அயராத - போராட்டங்கள் சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று தமிழர் தாயகம் எங்கும் பரவலாக இடம்பெறவுள்ளன. தவிரவும் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் அடக்கப்படும் தேசிய இனக்குழுமம் ஒன்றின் நீதி தேடும் அவலக் குரல் இந்த ஆண்டும் சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் உறுதியோடு எதிரொலிக்கும். ஆயினும் நீதி தான் எட்டாத தூரத்தில் கிட்டாத விடயமாக நீடிக்கின்றது.

# வி.சி.கவிலிருந்து ஆதவ் அர்ஜுனா ஆறு மாத காலத்துக்கு இடைநீக்கம்

## திருமாவளவன் நடவடிக்கை

வி.சி.க. துணை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனாவை கட்சியிலிருந்து ஆறுமாத காலத்துக்கு இடைநீக்கம் செய்வதாக அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் அறிவித்துள்ளார்.

மேலும், கட்சியின் நலன்களை முன்னிறுத்தி, கட்சித் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர்கள் ஆகிய மூவர் உள்ளடங்கிய தலைமை நிர்வாகக் குழுவில், ஆதவ் அர்ஜுனா மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திருமாவளவன் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக அண்மையில் நடந்த அம்பேத்கர் நூல் வெளியீட்டு விழாவில் ஆதவ் அர்ஜுனா பேசிய கருத்துகள் தமிழக அரசியல் களத்தில் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் திருமாவளவன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

“தமிழகத்தில் கூட்டணி ஆட்சியை உருவாக்க வேண்டும். அதில் பட்டியலின மக்கள் பங்கேற்க வேண்டும். இங்கே மன்னராட்சிதான் நிலவுகிறது. கேள்வி கேட்டால் உடனே சங்கி என்கிறார்கள். தமிழகத்தில் மன்னராட்சிக்கு இடமில்லை. 2026 இல் மன்னராட்சி முழுமையாக ஒழிக்கப்படும்.” என ஆதவ் அர்ஜுனா பேசியிருந்தார்.

இந்நிலையில், வி.சி.க. துணை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனாவை கட்சியிலிருந்து ஆறுமாத காலத்துக்கு இடைநீக்கம் செய்யப்படுகிறார் என அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“கட்சியின் துணை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா அண்மைக் காலமாக கட்சியின் நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறார் என்பது தலைமை நிர்வாகத்தின் கவனத்துக்குத் தெரிய வந்தது.



இது குறித்து கடந்த 07-12-2024 அன்று கட்சியின் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட முன்னணித் தோழர்களுடன் கலந்தாய்வு செய்யப்பட்டது. கட்சித் தலைமையின் அறிவுறுத்தல்களையும் மீறி, தொடர்ச்சியாக அவர் எதிர்மறையாக செயல்பட்டு வருவதும். அத்தகைய செயல்பாடுகள், மேலோட்டமாக நோக்கினால் கட்சியின் நலன் மற்றும் அதிகார வலிமைக்கானதாகத் தோன்றினாலும் அவை கட்சி மற்றும் தலைமையின் மீதான நன்மதிப்பையும் நம்பகத் தன்மையையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில், பொதுவெளியில் கடுமையான விமர்சனங்களை உருவாக்கியிருக்கிறது.

இத்தகைய போக்குகள், கட்சிப் பொறுப்பாளர்களிடையே நிலவும் கட்டுக்கோப்பைச் சீர்குலைக்கும் வகையில், கட்சிக்குள்ளேயே ஒரு எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், கட்சியினருக்கு இது ஒரு “தவறான முன்மாதிரியாக” அமைந்து விடும் என்கிற சூழலையும் உருவாக்கியுள்ளது.

இத்தகைய சூழலைக் கருத்தில் கொண்டு, கட்சியின் நலன்களை முன்னிறுத்தி, கட்சித் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர்கள் ஆகிய மூவர் உள்ளடங்கிய தலைமை நிர்வாகக் குழுவில், ஆதவ் அர்ஜ/னா மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, ஆதவ் அர்ஜுனா கட்சியிலிருந்து ஆறுமாத காலத்துக்கு இடைநீக்கம் செய்யப்படுகிறார்.” – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# உலகின் மிக விலை உயர்ந்த நத்தார் மரம் அறிமுகம்

உலகின் மிக விலை உயர்ந்த நத்தார் மரத்தினை ஜேர்மனி அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி இந்த நத்தார் மரத்தின் பெறுமதி சுமார் 04 மில்லியன் ஜேர்மன் பவுண்டுகள் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.


10 அடி உயரமுள்ள இந்த நத்தார் மரம் 2,024 திட தங்க நாணயங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.

இதனைப் பொன் நாணய வியாபாரியான Pro Aurum உருவாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

60 கிலோவுக்கும் அதிகமான எடையைக் கொண்ட இந்த வடிவமைப்பின் மேல் பகுதியிலுள்ள நாணயம் 24 கரட் தங்க நாணயம் என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இதனை விற்பனை செய்யும் எண்ணம் தனக்கு இல்லை என வடிவமைப்பாளர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.






# டில்லியில் உள்ள 40 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

இந்தியாவின் தேசிய தலைநகரில் அமைந்துள்ள 40 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என்று டில்லி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதர் மேரிஸ் பாடசாலை, பிரிட்டிஷ் பாடசாலை, சல்வான் பப்ளிக் பாடசாலை, டில்லி பப்ளிக் பாடசாலை மற்றும் கேம் பிரிட்ஜ் பாடசாலை உள்ளடங்கலாக பல பாடசாலைகளுக்கு இவ்வாறு வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளதாக பொலிஸார் குறிப்பட்டுள்ளனர்.




அந்த மிரட்டல் மின்னஞ்சலில்,

“நான் பாடசாலை கட்டடங்களுக்குள் பல வெடிகுண்டுகளை வைத்தேன். வெடிகுண்டுகளின் அளவு சிறியதாகவும், நன்றாக மறைக்கப்பட்டதாகவும் உள்ளது.


இதனால் கட்டடத்திற்கு அதிக சேதம் ஏற்படாது, ஆனால் வெடிகுண்டுகள் வெடிக்கும்போது பலர் காயமடைவார்கள்.

வெடிப்பைத் தடுக்க 30,000 அமெரிக்க டொலர்கள் தொகையைக் கோருகின்றேன்.” என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பாடசாலை நிர்வாகங்கள் துரித நடவடிக்கை எடுத்து மாணவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தன.

டில்லி பொலிஸார் தீயணைப்பு துறையினர், மோப்ப நாய் படை, வெடிகுண்டு கண்டறியும் குழுவினர் மற்றும் உள்ளூர் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து பாடசாலைகளில் தேடுதல் பணியில் ஈடுபட்டனர்.

எனினும், இதுவரை சந்தேகத்திற்கிடமான பொருள்கள் எவையும் கண்டறியப்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.








# அமெரிக்க கெப்பிட்டல் கலவரத்தில் ஈடுபட்டோருக்கு ட்ரம்ப் மன்னிப்பு

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், அடுத்த மாதம் பதவியேற்கும் முதல் நாளில், 2021 ஆம் ஆண்டில் அமெரிக்க கெப்பிட்டல் கலவரத்தில் ஈடுபட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

அதேநேரம், கடந்த 2024 ஜனவரி 6 கெப்பிட்டல் கலவரத்தை விசாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த லிஸ் செனி மற்றும் அவரது சக ஹவுஸ் கொமிட்டி உறுப்பினர்களுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார்.

தனது மகனுக்கு பொது மன்னிப்பு வழங்கிய தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் மீது நீதித்துறை விசாரணையை நாடமாட்டேன் என்று ட்ரம்ப் கூறியுள்ளார். கெப்பிட்டல் கலவரத்தை விசாரித்த சட்டமியற்றுபவர்கள் உட்பட அவரது அரசியல் எதிரிகள் சிலர் சிறையில் அடைக்கப்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், ஜனவரி 20 அன்று பதவியேற்ற பின்னர், குடியேற்றம், எரிசக்தி மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட நிர்வாக உத்தரவுகளை பிறப்பிக்கவுள்ளேன் என்றும் ட்ரம்ப் உறுதியளித்தார்.

அமெரிக்காவின் மிகப் பெரிய குற்றவியல் விசாரணை எனக் கூறப்பட்ட 2021 ஜனவரி 6 தாக்குதலில் குறைந்தது 1,572 பிரதிவாதிகள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட இடங்களில் சட்டவிரோதமாக நுழைவது முதல் தேசத்துரோக சதி மற்றும் வன்முறைத் தாக்குதல் வரையிலான குற்றச்சாட்டுகள் இதில் அடங்கும்.

இவர்களில் 1,251 இற் கும் மேற்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். 645 பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# மொஸ்கோவில் தஞ்சமடைந்தார் சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத்





டமஸ்கஸில் இருந்து தப்பிச்சென்ற சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத் மொஸ்கோவில் தஞ்சமடைந்துள்ளார் என ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அசாத்தின் ஆட்சியில் முக்கிய பங்காளியாகக் காணப்பட்ட ரஷ்யா, அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தற்போது அடைக்கலம் வழங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது.

சிரிய தலைநகர் டமஸ்கஸில் கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட கடுமையான தாக்குதல் காரணமாக அரச படைகள் அங்கிருந்து வெளியேறின. அத்துடன், சிரிய ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தும் டமஸ்கஸை விட்டு வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில், உலகெங்கிலும் உள்ள சிரிய மக்கள் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் ஆட்சியின் வீழ்ச்சியைக் கொண்டாடி வருகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




- நவீனன் -

# சர்வதேச மனித உரிமைகள் பிரகடனமும் ஐ.நா.வில் ஈழத்தமிழருக்கான தீர்மானமும்

> **(ஐ.நா. பொதுச்சபை 1948ஆம் ஆண்டு முதல் உலக மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10ஆம் திகதியாக பிரகடனப்படுத்தியது.)**

உலகளாவிய ரீதியில் மனிதர்களை சாதி, மதம், இனம், நிறம், மொழி, நாடு என்கிற பாகுபாடு காட்டி வேறுபடுத்தக்கூடாது. தனி மனிதன் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு வகை செய்வதே மனித உரிமையாகும். இத்தினமே சர்வதேச மனித உரிமைகள் தினமாக 1948ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகின்றது.

இன்றைய மனித உரிமை தினத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை மன்றத்தில் ஈழத்தமிழர்களுக்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை பலரும் மறந்து விட்டனர்.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் ஈழத்தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களுக்கு விசாரணை நடத்தவேண்டும் என்ற தீர்மானத்தை இங்கிலாந்து, ஜேர்மனி, கனடா உள்ளிட்ட 6 நாடுகள் கொண்டுவந்தன.

உலகமே உற்று நோக்கிய இந்த தீர்மானம் 21 நாடுகள் ஆதரவுடன் நிறைவேறியது. இத்தீர்மானத்தை சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, கியூபா, வங்கதேசம், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட 11 நாடுகள் எதிர்த்தன. இந்தியா, நேபாளம், ஜப்பான், இந்தோனேசியா உள்ளிட்ட 14 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

சர்வதேச மனித உரிமைகள் தினம்

சர்வதிஷா மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10ஆம் திகதி கடைபிடிக்கப்படுகின்றது. ஐ.நா. பொதுச்சபை 1948ஆம் ஆண்டு இத்தினத்தை பிரகடனப்படுத்தியது. இத்தினத்திலும் இலங்கையில் தொடர்ந்து மனித உரிமை மீறல் நடந்து வருவதாகக் குற்றச்சாட்டு உள்ளது.

2009 இல் நடந்த இறுதிக்கட்டப் போரின்போது, அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டதாகவும் குற்றச்சாட்டு உள்ளது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை முன்வைத்து, ஐ.நா., மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில், முதலில் 2013 இல் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது. சர்வதேச விசாரணைக் குழுவின் விசாரணைக்கு இலங்கை அரசு மறுத்தது.

இதுபோல, 2015 இலும் இன்னோர் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது. அப்போது சுயமாக விசாரணை நடத்துவதாக, இலங்கை அரசு அறிவித்தது. இதை நிராகரித்து, ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் 2021 இல் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி▼





# சர்வதேச மனித உரிமைகள் பிரகடனமும் ஐ.நா.வில் ஈழத்தமிழருக்கான தீர்மானமும்

தொடர்ச்சி▲

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக, 22 வாக்குகளும், எதிராக, சீனா உட்பட, 11 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா உட்பட, 14 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

உலகத் தமிழர்கள் அனைவரும் உற்று நோக்கிய இலங்கைக்கு எதிரான ஐ.நா. சபையின் மனித உரிமை மீறல் தீர்மானம் நிறைவேறியிருந்தாலும், இத்தீர்மானத்தின் தாக்கம் என்ன என்பதும், இதனால் என்ன எதிர்காலத்தில் நடக்கும் என்பதையும் தமிழ் மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

சர்வதேச மனித உரிமை பிரகடனம்

தமிழ் மக்கள் எதிர்பார்த்துள்ள தீர்மானங்கள் உருவாவதற்குரிய, உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனமானது என்பது பற்றிய ஓர் பார்வையை இக்கட்டுரை தருகின்றது.

உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனமானது மனித அடிப்படை உரிமைகளின் வரலாற்றில் பாரிய தாக்கங்களை கொண்டுவந்த ஒரு ஐ.நா. சாசனமாகும். 1948 செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபையின் தீர்மான இலக்கம் 217 ஏ மூலம் இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

தமிழ் பேசும் மக்கள் சர்வதேச மனித உரிமை பிரகடனம் பற்றி தெரிந்து கொள்வது அவசியமாகும். இந்த உரிமை பிரகடனம் பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது.

தனிமனித கௌரவமும் ஊறுபடுத்தப்படமுடியாத அடிப்படை உரிமைகளும் உலகிற் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பன நிலவுதற்கு அடிப்படையாகவுள்ளதாலும், மனித உரிமைகள் பற்றிய அசிரத்தையும் அவற்றை அவமதித்தலும், மனுக்குலத்தின் மனச்சாட்சியை அவமானப்படுத்தியுள்ள காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கு இடமளிக்க முடியாது.

பேச்சுச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம், அச்சத்திலிருந்தும், வறுமையிலிருந்தும் விடுதலை ஆகியவற்றை மனிதன் பூரணமாக துய்க்கத்தக்க இலட்சிய வாழ்வொன்றின் உருவாக்கமே மனிதகுலத்தின் மிகவுயர்ந்த குறிக்கோளாக எடுத்தியம்பப்பட்டுள்ளது.

மனித உரிமை பாதுகாக்கப்படுவது அவசியம்

கொடுங்கோன்மைக்கும், அடக்குமுறைக்கும் எதிரான இறுதி வழியாக எதிரெழுச்சி செய்யும் நிலைக்குத் தனிமனிதன் தள்ளப்படாமலிருக்க, வேண்டுமெனில் சட்டத்தின் ஆட்சி மூலம் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது அத்தியாவசியமாகும்.

நாடுகளிடையேயான நட்புறவுகள் ஏற்படுத்தப்படுவதும் வளம்படுத்தப்படுவதும் மேலியம்பிய இவ்வடிப்படையிலமைதல் இன்றியமையாததாகும்.

ஐக்கிய நாடுகள் சபையும் அதனிற் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ள மக்களும், அடிப்படை மனித உரிமைகள் பற்றிய அனைவரின் நம்பிக்கையையும் தனிமனித கௌரவம், அவ்வாழ்வின் பெறுமதி, ஆண்கள் - பெண்களிடையேயான சமத்துவம் ஆகியவற்றினை மீளவலியுறுத்தி அதிசுதந்திரச் சூழலிலே, சமுதாய முன்னேற்றம், வாழ்க்கைத் தர உயர்வு ஆதியவற்றைப் பட்டயம் ஒன்றின் மூலம் உருவாக்க வேண்டும்.

மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களுக்கான உலக மதிப்பையும், அனுட்டானத்தையும் மேம்படுத்தலை, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கூட்டுறவுடன் முழுமையாகச் செயற்படுத்தவென அங்கத்துவநாடுகள் உறுதி கொண்டுள்ளன.

இச்சூளுறுதியைப் பரிபூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு, இவ்வுரிமைகள் சுதந்திரங்கள் பற்றிய புரிந்துணர்விருத்தல் முக்கியமுடைத்தென்பதாலும், இதனை ஐ.நா. பொதுச்சபையானது பிரகடனப்படுத்துகின்றது.

சமூகத்தின் ஒவ்வொரு தனிமனிதனும் ஒவ்வொரு ஏற்பாட்டமைப்பும், இவ்விலட்சியங்களை இடையறாது மனத்திருத்தி, இவ்வுரிமைகள் சுதந்திரங்களுக்கான மதிப்பை மேம்படுத்துதற்குக் கற்பித்தல் மூலமும், கற்றுணர வேண்டும்.

தேசிய மற்றும் சர்வதேசிய வகையில் நிலைகொண்ட நடவடிக்கைகள் மூலமும் முயலும் தேவையை நோக்கி, அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும், தத்தம் குடிமக்களிடையேயும், தங்கள் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் ஆட்புலத்து மக்களிடையேயும், இவ்வுரிமைகள் சுதந்திரங்கள் முழுமையாகவும் வலிவும் பயனுறுதிப்பாடும் கொண்ட முறையிலும் ஏற்கப்பட்டு அனுட்டிக்கப்படுவதை நிலைநிறுத்த வேண்டும்.

சகல மக்களும் நாட்டினங்களும் தத்தமது சாதனையிலக்கின் ஏற்புடை அளவாகக் கொள்ளப்பட வேண்டியதென வகையிலமைந்த இந்த மனித உரிமைகளுக்கான உலகப் பொதுப் பிரகடனத்தைப் ஐ.நா. பொதுச் சபையானது பரிந்துரைக்கின்றது.



# வவுனியாவில் அனுமதியின்றி கட்டப்பட்ட வர்த்தக நிலையம்: நீதிமன்ற நடவடிக்கைக்குத் தயாராகும் நகர சபை நிர்வாகம்!

(கி.வசந்தன்)

வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள பிரபல பீசா விற்பனை நிலையம் அமைந்துள்ள கட்டடம், அனுமதிப் பத்திரத்துக்கு முரணாக அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து கட்டடத்தின் உரிமையாளருக்கு எதிராக வவுனியா நகர சபையால் எச்சரிக்கை நோட்டீஸ் ஒட்டப் பட்டுள்ளது.

அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நகர சபை கட்டளைச் சட்டங்களின் பிரகாரமும், நகரப்





பகுதிக்குள் முன்னெடுக்கப்படும் கட்டடங்களின் அபிவிருத்தி தொடர்பாகவும் வவுனியா நகர சபையிடம் முறையான அனுமதி பெற்றிருக்கப்பட வேண்டும்.

எனினும், குறித்த ஆதனத்தில் நகர சபையால் கடந்த 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அனுமதிக்கு முரணாகக் கட்டடம் அமைக்கப்பட்டு வணிக நீதியிலான நோக்கத்தில் இந்தக் கட்டடம் இயங்குவதனால் அது தொடர்பாக குறிப்பிட்ட சில ஆவணங்களை நகர சபைக்குச் சமர்ப்பிக்குமாறு கோரப் பட்டிருந்தது.

அந்தவகையில் திருத்திய வரைபடத்துக்கான கட்டட அனுமதி, அனுமதிக்கப்பட்ட வரைபடத்துக்கான குடிபுகு சான்றிதழ், சுற்றுச் சூழல் உரிமம், வியாபார உரிமம் ஆகிய வற்றை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு சபையால் கோரப் பட்டிருந்தது. எனினும், அது சமர்ப்பிக்கப்படாத நிலையில் மீளவும் 7 நாட்களுக்குள் அந்த ஆவணங்களை வழங்குமாறு கடந்த 5ஆம் திகதி சபையின் செயலாளரால் நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திருத்தச் சட்டங்களின் பிரிவுகளை மீறி நகர சபையின் அனுமதிப் பத்திரத்துக்கு முரணாகக் கட்டடம் அமைத்துச் செயற்படுவதாகக் கருதி நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித் தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அறிவித்தல்

**1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மற்றும் 1984 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் கீழ் அனுமதிக்கு முரணாக அமைக்கப்பட்டு இயங்கும் கட்டுமானம் தொடர்பான அறிவித்தல்**

திரு.R.ரவீந்திரன்.
இல-68. யாழ்ப்பாண வீதி.
வவுனியா.
திகதி-05.12.2024

01.06.1979 - ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இலக்கம் - 38/16 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய வவுனியா நகரசபைப் பகுதியானது, நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தும் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, 08.07.2021 ஆம் திகதிய 2235/54 ஆம் இலக்க மற்றும் 2009.04.17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்கங்கள் கொண்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரமும், 1940.01.01 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரமும் வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான காணி மற்றும் கட்டட அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் நகரசபையின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

எனினும். தாங்களால் வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட இல-68. யாழ்ப்பாண வீதி. வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனத்தில் நகரசபையினால் 18.07.2022 ஆம் திகதி வழங்கப்பட்ட கட்டட அனுமதிக்கு முரணாக கட்டடம் அமைக்கப்பட்டு வணிக ரீதியிலான நோக்கத்தில் குறித்த கட்டடம் இயங்குவதனால் கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களை 14 நாட்களுக்குள் வவுனியா நகரசபைக்கு சமர்ப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்பட்டது. எனினும் இதுவரை தங்களால் கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால். குறித்த ஆவணங்களை 07 நாட்களுக்குள் சமர்ப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

01.திருத்திய வரைபடத்திற்கான கட்டட அனுமதி
02.அனுமதிக்கப்பட்ட வரைபடத்திற்கான குடிபுகு சான்றிதழ்
03.சுற்றுச் சூழல் உரிமம்
04.வியாபார உரிமம்

அத்துடன் தாங்கள் இவ்வறிவித்தலின் பிரகாரம் செயற்பட தவறின் 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை திருத்தச் சட்டத்தின் 8G(1) மற்றும் 8H(1) பிரிவினை மீறித் தங்களால் இந்த நகர சபையின் அனுமதிப்பத்திரத்திற்கு முரணாக கட்டடம் அமைத்து செயற்படுத்துவதாக கருதி 1984ம் ஆண்டின் 44ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்தின் 28.அ(3) பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய தங்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தங்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வவுனியா நகரசபை,
05.12.2024

# கவிஞர் விடிவெள்ளி க.பே.முத்தையாவின்

# தமிழ் அறிவு நூல் வெளியீடும் நினைவுப் பேருரையும்

காவேரி கலா மன்றம் மற்றும் தாய் நிலம் பதிப்பகம் இணைந்து நடாத்திய கவிஞர் விடிவெள்ளி க.பே.முத்தையாவின் தமிழ் அறிவு நூல் வெளியீடும் நினைவுப் பேருரையும் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் கற்கை நிலையத்தில் நடைபெற்றது.

இதில் வரவேற்புரையை தாய் நிலம் பதிப்பகத்தின் இயக்குநர் கவிஞர் கு.ரஜீபனும், தலைமையுரையை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸூம், ஆசியுரையை பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகளாரும் நிகழ்த்தினார்கள்.

விடிவெள்ளி கவிஞர் க.பே.முத்தையா நினைவுப் பேருரையை "தமிழர் பண்பாட்டில் இயற்கை மேலாண்மை" எனும் தலைப்பில் முனைவர் மனோன் மணி சண்முகதாஸ் ஆற்றினார்.

தமிழ் அறிவு நூலை பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் வெளியீட்டு வைக்க அதன் முதல் பிரதியை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பெற்றுக் கொண்டார்.

நூல் மதிப்பீட்டுரையை பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் கவிஞர் த.ஜெயசீலன் நிகழ்த்தினார்.

வாழ்த்துரையை யாழ். உடுத்துறை மகா வித்தியாலயத்தின் அதிபர் ந.தேவராஜா ஆற்றினார்.

நிறைவுரையை காவேரி கலா மன்றத்தின் பொருளாளர் எஸ்.புத்தி சிகாமணி நிகழ்த்தினார்.














# உள்ளூராட்சி மன்ற தேர்தலை இரத்து செய்ததால் 72 கோடி ரூபாவிற்கும் அதிக பணம் வீண்விரயம்

## டலஸ் அலகப்பெரும ஜனாதிபதிக்கு கடிதம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இரத்து செய்ததால் 72 கோடி ரூபாவிற்கும் அதிக அரச பணம் வீண் விரயமாகியுள்ளதாக சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க விற்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

22 மாதங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்து புதிய வேட்புமனுக்களை முன்வைத்து விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தற்போதைய அமைச்சரவை எடுத்த தீர்மானத்திற்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் மக்களினதும் ஆசிர்வாதம் கிடைக்கும் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் வங்குரோத்து நிலைமையை மூடி மறைக்கும் நோக்கில் 2023 ஜனவரி மாத இறுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இரத்து செய்யும் வகையில் தான்தோன்றித் தனமாக எடுத்த தீர்மானத்தால் 72 கோடி ரூபாவிற்கும் அதிக அரச பணம் வீண்விரயமாகியதாக அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த பணம் ஆட்சியாளர்களின் தனிப்பட்ட பணம் இல்லை எனவும் மாறாக பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட வரிப்பணம் எனவும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதம் எதிர்க்கட்சித் தலைவர், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானித்த தேர்தல் ஆணைக்குழுவையும் ஆணையாளர்களையும் தூற்றி தேர்தலை நடத்துமாறு உத்தரவிட்ட உயர் நீதிமன்றம் மற்றும் நீதியரசர்களை அவமானத்திற்குட்படுத்தி செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாம் அரசியல் முதிர்ச்சியற்றவர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளதாக டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி கொள்ளை, சீனி வரி மோசடி, விசா மோசடி போன்ற அரசியல் குற்றங்களின் பட்டியலில் குறித்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கொள்ளையும் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் அரசியலமைப்பின் மூலம் பெறப்பட்ட அரசியல் சலுகைகளை ஆராயாது உரிய பிரதிவாதிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் டலஸ் அழகப்பெரும தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## சிரேஷ்ட, கனிஷ்ட கடற்படை வீரர்களுக்கு பதவி உயர்வு

சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட கடற்படை வீரர்கள் 2,138 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடற்படை தளபதி, வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பரிந்துரைக்கு அமைய இந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை கடற்படை மேற்றுதனது 74ஆவது ஆண்டு பூர்த்தியை கொண்டாடியது.

## கடற்றொழிலுக்கு செல்வதை தவிர்க்குமாறு கோரிக்கை



தென்மேற்கு வங்காளவிரிகுடாவில்காற்றமுத்த தாழ்வு மண்டலம் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளமையினால் அந்தப் பகுதியில் கடற்றொழில் செயற்பாடுகளைத் தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கோரியுள்ளது.

இதன்படி, குறித்த கடற்பகுதிகளில் காற்றானது 60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் அதிகரித்து வீசக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு இந்த எச்சரிக்கை அமுலில் இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமானது நாளை இலங்கை மற்றும் தமிழகத்தை அண்டிய தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளை அடையக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.



# அரிசி ஆலைகளை கண்காணிக்க தலா இரு அதிகாரிகள் நியமனம்

அரிசி ஆலைகளிலிருந்து நாளாந்தம் விநியோகிக்கப்படும் அரிசி தொகை தொடர்பில் சோதனைகளை நடத்துவதற்காக பாரிய அளவிலான அரிசி ஆலை ஒன்றுக்காக தலா 2 அதிகாரிகளை ஈடுபடுத்தியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அரிசி ஆலை உரிமையாளர்களின் நாளாந்த அரிசி தொகை விநியோகம், விலை, அந்த விலையின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு அரிசி கிடைக்கின்றதா என்பன உள்ளிட்ட விடயங்களை இவர்கள் ஆராயவுள்ளனர் என நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

பொலன்னறுவை மற்றும் அம்பாந்தோட்டையிலுள்ள அரிசி ஆலைகளில் நேற்று முன்தினம் முதல் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

10 நாள்களுக்கு தொடர்ச்சியாக அரிசி ஆலைகளில் சோதனைகள் நடத்தப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சில்லறை விலையுடனான நிர்ணய விலையில் நேற்று முன்தினம் முதல் அரிசியை விநியோகிப்பதற்கு அரிசி ஆலை உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இவர்கள் இந்த இணக்கப்பாட்டை அறிவித்திருந்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட விலையை விடவும் அதிக விலையில் அரிசியை விற்பனை செய்வோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இதன்போது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

# பரீட்சை உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்து கொடுப்பனவு குறைப்பு

## விளக்கம் கோருகிறார் ஜோசப் ஸ்டாலின்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகளுடன் தொடர்புடைய கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்து கொடுப்பனவு குறைக்கப்பட்டமை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம் விளக்கமளிக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இந்த போக்குவரத்து கொடுப்பனவுகள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வெளியிட்டுள்ள இரண்டு சுற்றறிக்கைகளால் சர்ச்சை எழுந்துள்ளது.



இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இந்த கொடுப்பனவு குறைப்பினால் தற்சமயம் பரீட்சை கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

எனவே, பரீட்சை கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட போக்குவரத்து கொடுப்பனவுகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கோரியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.12.2024




தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் வெற்றி பெறலாம். உங்களிடம் காணப்படும் உற்சாகமான போக்கு காரணமாக நீங்கள் உங்கள் செயல்களை எளிதாக ஆற்றுவீர்கள்.

பணியில் உங்களுக்கு ஏற்படும் திருப்தியான உணர்வு காரணமாக நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை அடைவதற்கு அதிக பணம் காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் முன்பு எடுத்த விவேகமான முடிவு காரணமாக இன்று உங்களின் நாள் வெற்றிகரமாக அமையும். உங்களிடம் இன்று உறுதியும் உற்சாகமும் காணப்படும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான நிலை காணப்படும்.சக பணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் செயல்திறனுக்கு பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் நேர்மறையான மற்றும் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நேர்மறை யான கண்ணோட்டம் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு எதிர்பாராத நன்மைகள் நடக்கும். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல.

பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளைக் கையாளும்போது இன்று பொறுமை மேற்கொள்ளவேண்டியது அவசியம்.

உங்களின் குழப்பமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் அவ்வளவு சிறப்பாக இருக்காது. நீங்கள் தலைவலியால் பாதிக்கப்படுவீர்கள். அமைதியான போக்கு நல்ல பலன் தரும்.




பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

பணியில்திருப்தியின்மை காணப்படும். திட்டமிட்ட முயற்சியின் மூலம் உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை ஜெயிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க எதிர்மறை எண்ணங்களை தவிர்த்தல் வேண்டும். மனம் திறந்து பேச வேண்டும்.

உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று சேமிப்பதற்கும் வாய்ப்பு இருக்காது.

இன்று செரிமானப் பிரச்சினை ள் ஏற்படலாம். எனவே தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.




இன்று நல்ல பலன்கள் கிடைக்கும் நாள். திட்டமிட்ட முயற்சியும் நேர்மறை எண்ணங்களும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

வேலைகள் அதிகமாக காணப்பட்டாலும் நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் செயல்திறனில் உங்கள் தன்னம்பிக்கை வெளிப்படும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு இருவரும் மகிழ்ச்சியடைவீர்கள்.

இன்று உங்களிடம் கணிசமான பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நிறைந்த மன ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். இன்று உங்களிடம் பதட்டம் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் தரும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. நேர்மையாக பணியாற்றுவது சவாலானதாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். இல்லாவிடில் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும். உறவுப் பிணைப்பை வலுப்படுத்த அன்பாக இருங்கள்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பயணத்தின்போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.

உங்களிடம் தேவையற்ற கவலைகள் காணப்படும். இதனால் தலைவலிக்கு ஆளாவீர்கள்.




இன்று சிறிது மந்தமாக காணப்படுவீர் கள். திட்டமிட்ட முயற்சியும் செயல்க ளில் விழிப்புணர்வும் தேவை. இன்று உங்களுக்கு அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.

பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக உங்களிடம் கவனக்குறைவு காணப்படும். திட்டமிட்டு கவனமுடன் இருந்தால் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு இருப்பதாக உணர்வீர்கள். இருவரும் மனம் திறந்து பேசுவதன் மூலம் இந்த நிலையை சமாளிக்கலாம்.

பண இழப்பு காணப்படுகின்றது. செலவுகள் அதிகமாக காணப்படுவதன் காரணமாக இன்று பணம் கையாள்வது கடினமாக இருக்கும்.

இன்று செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று நீங்கள் கடின உழைப்பின் மூலம் வெற்றி காணலாம். ஆன்மீக ஈடுபாடு மற்றும் ஏழைகளுக்கு செய்யும் உதவி மூலம் ஆறுதல் பெறலாம்.

பணிகள் அதிகமாகவும் சவாலானதாகவும் இருக்கும். வேலை தொடர்பான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் ஏற்படும் தவறான புரிந்துணர்வு காரணமாக உறவில் நல்லிணக்கம் பாதிக்கும். நீங்கள் சிறிது ஏமாற்றகரமாக உணர்வீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பதட்டம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். ஆரோக்கியமாய் இருக்க அமைதியாய் இருங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.12.2024




இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகள் எடுக்கலாம். விரைவான செயல்கள் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்களின் சிறந்த முயற்சி மூலம் உங்கள் செயல்திறனை மேம்படுத்த இயலும். உங்களின் தனித்த திறனும் திறமைகளும் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் நல்லிணக்கமும் காணப்படும். இருவரும் பொருத்தமான ஜோடியாக இருந்து மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் நிலை காணப் படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள்.




இன்று சில ஏமாற்றங்கள் காணப் படும். எந்த விஷயத்தையும் யதார்த்த மாக கையாள வேண்டும். சவாலான சூழ்நிலைகளை எந்தவிதமான எதிர் பார்ப்புமின்றி தைரியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவு காணப் படாது. அதிகப்படியான பணிகள் கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் உறவில் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க சிறப்பாக திட்டமிட வேண்டும்.

வயிற்று வலியினால் சில பிரச்சினைகள் ஏற்படும். நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.




இன்றைய நாள் சாதகமான பலன் கள் தருவதைக் காண்பீர்கள். சம நிலையோடு இருந்தால் சரியான முடிவெடுத்து வெற்றி காணலாம். இன்று உங்களிடம் அமைதியும் திருப்தியும் காணப்படும்.

உங்களின் தனித்த திறன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டை உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். நண்பர்களின் இல்லத்திற்கு உங்கள் துணையை அழைத்துச் செல்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு அனுகூலமாக இருக்காது. நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இன்று வெற்றி பெறுவதற்கு அமைதியான கட்டுப்பட்டா தான அணுகுமுறை தேவை.

திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் பணியில் தவறுகளை தவிர்க்கலாம். என்றாலும் உங்கள் மேலதிகாரிகளிடம் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் பாதிக்கும். எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்வதன் மூலம் உறவுப் பிணைப்பை வலுப்படுத்த முடியும்.

பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். இன்று மோசமான ஆரோக்கியம் காணப்படும். தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

